**திங்கள் | வைகாசி 1** 📖 மாலை வாசகம் - யோவான் 14:12 -16

# அன்பிலே வளர்ந்து பெருகுங்கள்

குடும்பத்தாரையும், சொந்த பந்தங்களையும் அன்பு செய்வதே மிகவும் அரிதாக இருக்கும் இந்தக் காலத்திலே, எம் உடன் சகோதரரரையும், ஏனை யோரையம் அன்பு செய்வது எப்படி சாத்தியமாகும் என்று ஒரு விசு வாசியானவன் தன் மேய்ப்பரோடு, தேவ அன்பைக் குறித்து பேசிக் கொண்டிருந்தான். இந்த உலகிலே, பொதுவாக மனிதர்களுக்கிடையே நட்பு எப்படி உருவாகின்றது? என க்கு பிடித்த வாழ்க்கைமுறை, பொழு துபோக்குகள் அவருக்கும் பிடித்தி ருக்கின்றது எனவே நாம் நண்பர் களாக இருக்கின்றோம் என்றும், என் னுடைய பிள்ளை படிக்கின்ற பள்ளி க்கூடத்திலே, இன்னாருடைய பிள் ளைகளும் படிப்பதால், நாம் ஒருவருக்கொருவர் உதவிசெய்து இரு குடும்பங்களும் நட்பாக இருக்கின்றோம் என்றும் தங்கள் நட்பின் ஆரம் பத்திற்கான காரணங்களை கூறிக் கொள்ளுகின்றார்கள். ஆனால், மனித ர்களுக்கிடையிலான உறவு, சோதனைக்குட்படுத்தப்படும் போது, அந்த உறவின் உறுதியும், மனிதர்களின் உண்மையான சுபாவங்களும் வெளி க்காட்டப்படுகின்றதையும் நாம் காணலாம். பொதுவாக விருப்பு வெறுப் புக்களை மையமாக வைத்து உண்டாகும் நட்பும் உறவும் விசுவாசிக ளுக்கிடையிலே இருப்பதையும் நாம் காண்கின்றோம். ஆனால், தேவனா னவர் கூறும் அனபானது நம்முடைய விரும்பங்களை மையமாக கொண் டிருக்கும் அன்பல்ல. இந்த உலகத்திலே, தாயின் அன்பே மனிதர்களால் மிகவும் உயர்ந்ததாக மேன்மைபாராட்டப்படுகின்றது. ஆனால், சில வேளை களிலே தாயின் அன்பானது தணிந்து போய்விடலாம். ஆனால், கிறிஸ் துவின் அன்போ என்றும் மாறாததாக இருக்கின்றது. அத்தகைய அன் பிலே நாம் வளர்ந்து பெருக வேண்டும் என்பதே தேவனுடைய சித்த மாக இருக்கின் றது. மனித பெலத்தால் நாம் அத்தகைய அன்பை வள ர்க்க முடியாது என்பதை தேவனானவர் அறிந்தபடியால், இயேசு கிறி ஸ்துவிலிருந்த பரிசுத்த ஆவியை நமக்கு கொடுத்திருக்கின்றார். மெய் யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் என்று ஆண்டவராகிய இயேசு கூறி யிரு க்கின்றார். மேலும் நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கின்றோம். அந்தப் போதனைக ளுக்கு இடங் கொடுப்போம். தேவ அன்பிலே தினமும் வளருவோமாக.

**1 தெச 4:10**

**சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்;**

**ஜெபம்:** அன்பின் தேவனே, உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை நான் உண்மையாக விசுவாசித்து, அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் அன் பிலே வளர்ந்து பெருகும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எல்லாம் புதிதாயின

ஒரு ஊரிலே பல தசாப்தங்களாக இயங்கி வந்த பத்திரிகை அச்சகத்திலே, பத்திரிகைகளை துரிதமாகவும், துல்லியமாகவும் அச்சிடுவதற்கு, நவீன தொழிநுட்பத்தையுடைய அச்சுப் பொறிகளை கொள்வனவு செய்தார்கள். அச்சுக்கூடத்திலே தொழில்புரிபவர்களுக்கு வேண்டி பயிற்சிகளை கொடுத்திருந்த போதும், பத்திரிகைகளை குறித்த நேரத்திற்கு அச்சிட முடியாமலும், அச்சிட்ட பத்திரிகைகளிலே கழிவுகள் அதிகமாக இருப்பதையும் அதன் இயக்குனர் கண்டு மிகவும் குழப்பமடைந்தார். காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்த போது, அச்சுக்கூடத்தின் முகாமையாளர், பழைய அச்சுப் பொறிகளிலே மிகவும் அனுபவமிக்கவராக இருந்ததால், பழைய அச்சுப் பொறியையும், காலம் கடந்த தட்டெழுத்து முறைமைகளையும் விட்டுவிட மனதில்லாமல், அவைகளையே உபயோகித்து வந்தார். இதை அறிந்து கொண்ட இயக்குணர் கோபமடைந்து, அந்த முகாமையாளருக்கு எச்சரிப்பை வழங்கினார். பிரியமானவர்களே, இவ்வண்ணமாகவே, நாமும் கிறிஸ் துவை அறிய முன்னதாக இந்த உலகத்தின் போக்குகளுக்கு உட்பட்டவர்களாக, அதன் முறைமைகளை பின்பற்றி வந்தோம். இது பழையமனுஷனுக்குரிய முறைமைகள். நாம் கிறிஸ்துவை அறிந்து கொண்ட போது, தேவ பிள்ளைகளாக்கப்பட்டோம். அந்த நாளிலே, தேவனுடைய பரிசுத்த வித்தை நமக்குள்ளே பெற்று, மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சுபாவங்களுக்குரிள புதிய மனுஷனுக்குரிய முறைமைகளை பெற்றுக் கொண்டோம். பழைய சுபாவங்களுக்கு இனி இடம் இல்லை என்று தேவ சமுகத்திலே தீர்மானம் செய்து கொண்டோம். அப்படி தீர்மானித்த பின்பும், பழைய முறைமைகள் நம்மில் இயங்கிக் கொண்டிருக்குமானால், புதிய மனுஷனால் உண்டாகும் தெய்வீக முறை மைகளுக்கு இடமில்லாதிருக்கும். எடுத்துக்கட்டாக, உங்கள் அன்பு மாயமற்றதாக இருப்பதாக என்று வேதம் கூறுகின்றது. மாயையான இந்த உலகிலே எப்படி நம்முடைய அன்பு மாயமற்றதாக இருக்க முடியும்? புதிய மனுஷனுக்குரிய ஆவிக்குரிய முறைமைகளானது நம்மில் இயங்குவதற்கு நாம் இடம் கொடுக்க வேண்டும். மாறாக, நாம் பழமையான உலக முறைமைகளை நம்மில் விட்டுவிட மனதில்லாதிருப்போமானால் நாம் மறுபடியும் மாயக்காரராக மாறிவிடுவோம். எனவே கிறிஸ்துவின் அன்பு நம்மில் வெளிப்படும்படி புதிதும் ஜீவனுமான முறைமைகளுக்கு நாம் இடம்கொடுப்போமாக.

**2 கொரிந்தியர் 5:17**

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

**ஜெபம்:** புதிதும் ஜீவனுமான மார்க்கத்தினுள் என்னை அழைத்த தேவனே, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, என்னுடைய பழைய மனுஷனுக்குரிய முறைமைகளை முற்றாக களைந்துவிட பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தணிந்து போகும் அன்பு

ஒரு வாலிபனானவன், ஊரிலுள்ள ஒரு பெண்ணை விரும்பியிருந்ததால், அவளை தனக்கு திருமணம் செய்து தரும்படியாக தன் பெற்றோரை கேட்டுக் கொண்டான். அவ்வண்ணமாகவே அந்தப் பெண்ணும் தன் பெற்றோரிடம் வேண்டிக் கொண்டாள். திருமணம் என்பது விளையாட் டல்ல, வாழ்க்கையின்அர்ப்பணிப்பு என்று இருவருடைய பெற்றோர்களும் பல ஆலோசனைகளை தங்கள் பிள்ளைகளுக்கு கூறினார்கள். அந்த வாலிபனானவன், தான் எந்த நிபந்தனையுமின்றி அந்தப் பெண்ணை அன்பு செய்வதாக கூறினான். அவளும், தான் எல்லா விடயங்களிலும் அவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்வேன் என்று உறுதியாகக் கூறினாள். மேலும் அவர்கள் தங்கள் பெற்றோர்களை நோக்கி: இது உங்களுடைய நாட்களைப் போல அல்ல, இது புதுயுகம். நாங்கள் சிறப்பாக வாழ்வோம் என்று திட்டமாக கூறினார்கள். அவர்களின் பேச்சின்படி, அவர்கள் ஒரு வருக்காக ஒருவர் மரிப்ப தற்கும் ஆயத்தமாக இருந்தார்கள். திருமணம் முடிந்து ஒரு வருடம் சென்ற பின்பு, அவர்களுடைய வாழ்க்கையிலே சவால்கள் வந்த போது, அன்புக்கும், கீழ்படிதலுக்கும் இடமில்லாமற் போயிற்று. இனிமையாக பேசிய வார்த்தைகள் எல்லாம் கசப்பாக மாறியது. ஒருவருக்காக ஒருவர் மரிக்க ஆயத்தமாக இருந்தவர்கள், ஒருவரை ஒருவர் கொன்று போடுமளவிற்கு அவர்களுடைய மனதிலே வெறுப்பு குடி கொண்டது. அப்படியானால், அன்பு ஒருக்காலும் ஒழியாதது என்றால், அவர்கள் திருமணமாக முன்பு அவர்கள் இருவருக்குமிடையே இருந்த உறவின் பிணைப்பு என்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள். மாம்சத்தின் எண்ணங்கள், சௌந்தரியம், அழகு போன்ற வெளித்தோற்றங்களை மட்டும் மையமாக கொண்ட உறவுகள் எப்பொழுதுமே அநித்தியமானவைகள். ஆசை இச்சைகள் போன்றவைகளே அங்கே மையமாக இருந்தது. அந்த இளம் தம்பதிகளுடைய வாழ்க்கையில்மட்டுமல்ல,வளர்ந்தோர்,முதிர்ந்தோரின்வாழ்க்கையிலும் இவைகளை நாம் காண்கின்றோம் அல்லவா? சில தேவபிள்ளைகளுடைய வாழ்விலும் இத்தகைய நிலைமைகள் உண்டாகின்றதல்லவா? ஏன் அப்படி உண்டாகின்றது? திருமண வாழ்க்கை மட்டுமல்ல, மாம்சதின் இச்சைகளினால்உண்டாகும் எந்த ஒரு உறவும் நிலையற் றதா கவே இருக்கும். தேவனால் உண்டாகும் அன்பே நிலையான அன்பு. அவருடய ஆலோசனையின் வழியிலே நடக்க தன்னை ஒப்புக் கொடுகின்றவன் மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடுக்காமல் தேவன்மேல் வைத்த விசுவாசத்தினாலே அவைகளை ஜெயங் கொள்கின்றவனாக இருப்பான்.

**கலாத்தியர் 5:16**

ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

**ஜெபம்:** நித்திய வாழ்வுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திருந்து அன்பு என்னும் நற்கனியிலே அனுதினமும் பெருகும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வெற்றி வாழ்விற்கு வழிமுறைகள்

வாழ்க்கைத்தரம் வளம்பெற, செல்வம் செழிப்போடு வாழ வெற்றிக்கு ஏழு படிகள் என்றொரு பாடக்கோப்பு அடங்கிய புத்தகமொன்று சொற்ப நாட்களுக்குள்ளே ஆயிரக்கணக்கான பிரதிகள் விற்கப்பட்டது. அதை எழுதியவர், தன் வாழ்வில் எப்படி வெற்றி ஏற்பட்டது, தன்னுடைய அற்பமான ஆரம்ப நாட்கள், வெற்றிக்கு வழிவகுத்த படிகள், ஐசுவரியம் நிறைந்த நாட்கள் என்று மூன்று பிரிவாக தன்னுடைய அனுபவத்தின் சாரம்சத்தை தொகுத்து வழங்கியிருந்தார். அதை கொள்வனவு செய்தோர் அந்த புத்தகத்தை வாசித்தார்கள், உற்சாகமடைந்தார்கள், சில படிகளை கடந்து சென்றார்கள், சில நாட்களுக்கு பின்போ சோர்ந்து போனார்கள். ஆனால், புத்தகத்தை விற்பனை செய்தவனான ஐசுவரியவானோ, இன்னும் திரளான பணத்தை தனக்கென சேர்த்துக் கொண்டான். புத்தகத்தை கொள்வனவு செய்தவர்கள் வெற்றி பெறுவதும், தோல்வியடைவதும் அவர்களுடைய பிரச்சனையாக இருந்தது. புத்தகத்தை விற்பனை செய்த பின்பு, மேற்கொண்டு, அதை எழுதியவர் எந்த உதவியையும் செய்யப் போவதில்லை. எனவே, அந்தப் புத்தகத்தினால் பிரயோஜனம் அடைந்தவர்கள் ஏற்கனவே வசதியோடு வாழ்ந்த ஒரு சிலராகவே இருந் தார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் அவ்வண்ணமாக நமக்கு தம்முடைய ஜீவ வார்த்தைகளையும் ஆலோசனைகளையும் கொடுத்து விட்டு, நம்மை நம்பாட்டிற்கே விட்டுவிடுபவரல்ல. மாறாக, நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதிலும் நம்மோடு கூட இருப்பதற்கு, துணையாளராகிய பரிசுத்த ஆவியானவரை கொடுத்திருக்கின்றார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்திலிருந்து நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கின்றார். நாம் தவறி விழும்போது, நம்மை அப்படியே விட்டுவிடாமல், நம்மை தூக்கி சுமக்கின்றார். அது உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை என்ற எந்தப் பாகுபாடுமின்றி, ஒருவனும் கெட்டுப்போகாமல் இலக்கை அடையவேண்டும் என்று சித்தமுள்ளவராக இருக்கின்றார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். தம்முடைய ஆலோசனையின்படி அவர்களை நடத்தி முடிவிலே நித்திய மகிமையிலே தம்முடைய சேர்த்துக் கொள்கின்றவராயிருக்கின்றார்.

**சங்கீதம் 73:24**

உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.

**ஜெபம்:** தாயின் கருவில் என்னை தெரிந்து கொண்ட தேவனே, உம்முடைய ஆலோசனையின் மேன்மையை உணரக்கூடிய பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து, அவைகளின் வழியிலே நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பரலோக குடிமக்கள்

மேற்கத்தைய நாடொன்றிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவன் தன்னுடைய 18வது வயதானது எப்போது வரும் என்று ஆவலோடு காத்திருந்தான். அந்த பிறந்த நாளோடு, தான் வாழும் நாட்டின் சட்டப்படி அவன் பூரண குடிமகனுக்குரிய உரிமைகளையும் (Rights) சலுகைகளையும் (Privileges) அவன் வாஞ்சித்து காத்திருந்தான். முக்கியமாக அவன் தன் சராதி அனுமதிப் பத்திரத்தை பெற்று தான் மோட்டார் வண்டிகளை தனி யாக ஒடுவதற்கு ஆவலுள்ளவனாக இருந் தான். அதுமட்டுமல்ல, இதுவரை க்கும் பெற்றோர் பாதுகாவலர் சம்ம தத்தோடு செய்து வந்த பல காரியங்களை அவன் தன்னுடைய இஷ் டப்படி செய்யவதற்கு சட்டப்படி அவன் உரிமையை பெற்றுக் கொள்வான். அவனுடைய தெரிவுகளும், தீர்மானங்களும் அவனுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதாயிருக்கும். நம்முடைய வாழ்விலே, நாம் மீட்கப்பட்ட நாளுக்கென்று முத்திரையாக தேவனுடைய ஆவியை பெற்றிருக்கின் றோம். அந்த நாளிலே நாம் தேவனுடைய பிள்ளைகளென்ற பாக்கித்தை பெற்று, நம் தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிடும் சிலாக்கியத்தை அடைந்தோம். ஆவியானவர்தாமே நம்மோடு கூட இருந்து சகல சத்திய த்திலும்நம்மை வழி நடத்த அவர் எப்போதும் ஆயத்தமுள்ளவராக இருக் கின்றார். பதினெட்டு வயதையடையப் போகும் வாலிபனானவனுக்கு, பெற்றோர் நல்ல ஆலோசனைகள கொடுக்க ஆயத்தமாக இருப்பதை போல, ஆவியானவரும் வரப்போகிற காரியங்களை நமக்கு அறிவி ப்பார். பாவத்தைக்குறித்தும், நீதியைக்கு றித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து நமக்கு உணர்த்துவார். ஆனால், அவருடைய சத்தத்தை கேட்டு நடப்பதும், அவருடைய சத்தத்தை அசட்டைபண்ணி விட்டுவிடுவதும் நம்முடைய தீர்மானமாகவே இருக்கின்றது. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணம் போன்ற மாம்சத்தின் இச்சைகளை நாம் நம்மில் நிறைவேற்றும் போது அவரை நாம் துக்கப்படுத்துகின்றவர்களாக இருப்போம். தொடர்ச்சியாக அவருடைய சத்தத்தை நாம் அசட்டை செய்யும் போது, நம்முடைய இருதயம் உணர்வற்றுப் போய்விடுவதால், துர்இச்சைகளை நிறைவேற்றுவது நம்முடைய சுபாவமாக மாறிவிடும். அதன் முடிவு நன்மைகுரியதல்ல. எனவே, சத்திய ஆவியானவரின் உணர்த்துதலுக்கு இடங்கொடுங்கள். நன்மையை கண்டடையுங்கள்.

**யோவான் 16:13**

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;**

**ஜெபம்:** பரிசுத்தத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, என்னுடைய உரிமை,சலுகைகளை நான் மாம்சஇச்சையின்படிநிறைவேற்றாமல், ஆவியானவரின் சத்த்திற்கு கீழ்படிய உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உகந்த பாத்திரம்

**2 தீமோத்தேயு 2:21**

**எஜமானுக்கு உபயோகமான தும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயி ருப்பான்.**

ஒரு வீட்டின் சொந்தக்காரன், கடைக்கு சென்றபோது, ஒரு அழகான பெரிய ஜாடியைக் கண்டு விலை கொடுத்து வாங்கி வந்தான். அந்த ஜாடியை வீட்டின் மூலையிலே வைத்தான். பல மாதங்கள்சென்ற பின்பு, அந்த ஜாடியானது, நூதனசாலையிலே (Museum) இருக்கும் தொல் பொருளுக்குரிய பொருளாக (Anti que) அது மனிதர்களுடைய பார் வைக்கு அழகாகஇருக்கின்ற தேய ல்லாமல், தனக்கு எந்தபிர யோஜன முமற்றதாக வீட்டில் பெரிய இட த்தைபிடித்துக் கொண்டு இருக்கி ன்றதென்பதை அவன் உணர்ந்து கொண்டான். ஒரு வீட்டிலே பற்பல பாத்திரங்கள்உண்டு. அவற்றில் சில வீட்டின் சொந்தக்காரனுக்கு மிக வும் பிரயோஜனமுள்ளதாக இருக்கின்றது. வேறு சிலவோ, அங்கு இரு ந்தாலும் இல்லாவிட்டாலும், அவனுக்கு எந்த இலாபமோ நஷ்டமோ இருப்பதில்லை. ஆனால், பார்வைக்கு அவை அழகாக காட்சியளிக்கி ன்றது. அதுபோல, சிலருடைய ஆவிக்குரிய வாழ்க்கை இருக்கின்றது. நம் முடைய எஜமானனாகிய ஆண்டவர் இயேசுவுக்கு பிரயோஜனமுள்ள பாத்திரமாக நாம் இருப்பதற்கு, ஒருவன் சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிந்து சுவிஷேசத்தை அறிவிக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாக்கப்பட்டவர்களில், உயர்ந்தவனோ, தாழ்ந்தவனோ, ஏழை யோ, பணக்காரனோ, வாலிபனோ, வயது சென்றவனோ, சரீர பெலவீன முள்ளவனோ, சரீரத்திலேபெலனற்றவனோ, கல்விமானோ, கல்வி யறி வற்றவனோ, ஆணோ பெண்ணோ என்ற எந்த பாகுபாடும் இல்லை. முத லாவதாக, கிறிஸ்து இயேசுவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநி யாயத்தைவிட்டு விலகியிருக்க வேண்டும். 1. விசுவாசத்தின் கிரியை களை நடப்பிக்க ஆயத்தமுள்ளவனாகவும், அதாவது கர்த்தரின் சத்த த்திற்கு கீழ்ப்படிய தன்னை ஒப்புக் கொடுக்கின்றவனாகவும் 2. கர்த்தரு டைய வேலைக்காக காத்திருக்கின்றவனாகவும் இருக்க வேண்டும். அப் பொழுது அவன் எஜமானனாகிய ஆண்டவர் இயேசுவுக்கு உபயோ கமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்து க்குரிய பாத்திரமாயிருப்பான். எனவே, நாம் எந்த நிலையிலிருந்தாலும், பார்வைக்கு அழக்கான பாத்திரமாக மாத்திரமல்ல, கர்த்தருக்கு உகந்த பரிசுத்தமாக்கப்பட்ட பாத்திரமாக இருக்கும்படிக்கு நம்மை தாழ்த்தி, அவருடைய வார்த்தையின்படி வாழ நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

**ஜெபம்:** என்னையும் நேசித்த தேவனே, இந்த உலகத்தின் பார்வையிலே நான் விலையேறப்பெற்ற பாத்திரமாக இருக்காமல், உமக்கு ஏற்ற மேலானவைகளை தேடுகின்ற பாத்திரமாக வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதற்காக அழைக்கப்பட்டீர்கள்?

நீ இருக்கின்ற இந்த நிலையிலேயே இருக்க முடியாது. எங்களுடைய கம்பனியில் தொடர்ச்சியான தனிப்பட்ட, தொழில்நெறி சார்ந்த முன்னேற்றத்திற்காக அநேக இலவசமான பாடத்திட்டங்களும், இலவச பயிற்சிகளும் உண்டு. அவைகளை உன்னுடைய காலஅட்டவணையின்படி நீ செய்து முடிக்கலாம். உன்னுடைய சக ஊழியர்களும் உனக்கு உதவி செய்வார்கள். அது உன் எதிர்காலத்திற்கும் நல்லது என்று ஒரு கம்பனியின் இயக்குனரொருவர் தன்னுடைய பிரிவில் வேலை செய்யும் ஒரு மனிதனுக்கு அறிவுரை கூறினார். அவனோ, நான் இருக்கின்ற வண்ணமாகவே இருக்கப்போகின்றேன். எனக்கு எந்த மாற்றமும் தேவையில்லை என்று கூறிவிட்டான். மேற்கொண்டு, இயக்குனரால் அவனுக்கு உதவ முடியவில்லை. பலஆண்டுகள் கடந்த பின்னர், தன் இளமைகாலத்திலே, அந்த இயக்குனர் சொன்ன நல்ல அறிவுரையை கேளாமல் இருந்ததை குறித்து அவன் மிகவும் மனம்வருந்தி னான்.

**பிலிப்பியர் 3:12**

**நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.**

ஆனால், காலம் கடந்து போயிற்று. பிரியமானவர்களே, அந்த மனிதனைப் போலவே, அழைப்பை பெற்ற சில தேவ பிள்ளைகளும், ஆரம்பத்திலே நன்றாக ஓடி, பின்னர் ஒரு இடத்திலே இது போதும் என்று ஒதுங்கி விடுகின்றார்கள். தங்கள் வாழ்க்கையில் தற்போது ஏற்ப ட்டிருக்கும் நிறைவினால் சிலர் நிர்விசாரம் அடைந்து விடுகின்றார்கள். சபையிலே சங்கத்திலோ பொறுப்புக்களை எடுத்தால், உபத்திரவங்கள் உண்டாகிவிடும் அது நமக்கு தேவையில்லை என்று பொறுப்புக்களை தள்ளி விடுகின்றார்கள். ஆவிக்குரிய வாழ்க்கையிலே போராட்டங்கள் உண்டு. பாடுகள் உபத்திரவங்கள் உண்டு ஆனால் அதற்கு மேலாக தேவனுடைய வல்லமை நமக்கு உண்டு என்பதையும், பாடுகள் உபத்திரவங்கள் வழியாக தேவனானவர் நம்மை வனைந்து, கிறிஸ்துவின் சாயலிலே வளரப் பண்ணுகின்றார் என்பதையும் மறந்து போய்விடுகின்றார்கள். பிரிய மானவர்களே, கர்த்தர் நம்மை தமக்கு உகந்த பாத்திரமாக வனையும்படிக்கு, உங்களை ஒப்புக் கொடுங்கள். கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்படுங்கள். நமக்கு முன்பாக இருக்கும் நித்திய பேரின்பத்தை நோக்கி பொறுமையோடு ஓடுங்கள்.

**ஜெபம்**: என் நிலைமையை நன்றாக அறிந்த தேவனே, ஆதியிலே நான் கொண்ட விசுவாசத்தைவிட்டு விலகாமல், இன்னுமாய் உம்மில் வளர்ந்து பெருக நீர் எனக்கு உற்சாகம் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| திங்கள் \| வைகாசி 8 | 📖 மாலை வாசகம் – 1 பேதுரு 2:9 |
|---|---|

# தேவன் தெரிந்து கொண்ட பாத்திரம்

ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்று சவுல் என்னும் மனிதனைக் குறித்து அனனியா கர்த்தரிடம் கூறினான். ஏனெனில் சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. சவுல் கிறிஸ்தவர்களை சிறைப்பிடிக்கும்படி, யூதமதத்தின் பிரதான ஆசாரியரின் அனுமதியோடு தமஸ்குவுக்குச் சமீபித்தபோது ஆண்டவர் இயேசு அவனை சந்தித்தார். அவனுடைய மனக்கண்களை கர்த்தர் திறந்து விட்டார். இயேசுவே மனித குலத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும் இரட்சகர் என்பதை அறிந்து கொண்டான். அவன் தேவ சித்தம் செய்ய தன்னை முழுமையான அர்பணித்தான். அவனை குறித்து கர்த்தர் அனனியாவுக்கு சாட்சி கூறும்போது: நீ அவனிடம் போ. அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்றார். பிரியமானவர்களே, நம்முடைய கடந்த காலம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், நாம் தேவனாகிய கர்த்தருடைய சித்தம் செய்ய நம்மை முழுமையாக ஒப்புக் கொடுக்கும் போது, தேவன்தாமே நம்மை விலையேறப்பெற்ற பாத்திரமாக மாற்றுகின்றவராயிருக்கின்றார். பவுல் என்று சொல்லப்பட்ட சவுல், தனக்குண்டான மதவைராக்கியத்தி னால் சபையை துன்பப்படுத்தினான். அதனால், அவன் செய்தது நீதி என்று நியாயப்படுத்த முடியாது. அநீதியான செயல்களை செய்த அந்த மனிதனையும், தேவன்தாமே தமக்கென பிரித்தெடுத்து, தமக்கு உகந்த பாத்திரமாக மாற்றினார். கடந்த காலத்திலே நீங்கள் என்ன செய்தீர்கள் என்ன செய்யவில்லை, என்னத்தை கற்றேன், என்னத்தை கற்றுக் கொள்ளாமல் விட்டேன் என்பதை குறித்து சோர்ந்து போகாமல், இப்போது கர்த்தருக்குள் திடன் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையை பூரணமாக ஒப்புக்கொடுங்கள், அவர் உங்களை தமக்கு உகந்த பாத்திரமாக மாற்றி, உங்களை வழிநடத்திச் செல்வார்.

**அப்போஸ்தலர் 9:15**

**என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்.**

**ஜெபம்**: என்னை பெயர் சொல்லி அழைத்த தேவனே, என் வாழ்வில் என்னுடைய சுய வைராக்கியத்தின்படி கிரியைகளை நடப்பிக்காமல், உம்முடைய சித்தத்தின்படி நான் வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தண்ணீர் தேங்கிய குட்டை

மழை நாட்களிலே ஓடும் நதியின் நீர்மட்டம் உயர்ந்ததால், தண்ணீர் புரண்டு, நதிக்கு அருகிலுள்ள குட்டைகளை நிரப்பியது. மழை ஓய்ந்து, நதிக்கும் அந்த குட்டைகளுக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போனதால், குட்டைகளிலே தண்ணீர் தேங்கி நின்றது. நாட்கள் செல்லும் போது, அந்த தண்ணீர் மாசுபட ஆரம்பித்து, சேறும், சகிதியும், அழுக்கு நிறைந்ததுமாக குட்டைகளிலே நாற்றம் எடுத்தது. ஆனால் ஓடும் நதியிலோவென்றால் எப்போதும் சுத்தமான, தெளிவான உபயோகத்திற்கு ஏற்ற தண்ணீர் இருந்தது. இந்த உலக த்திலே சில மனிதர்கள் பொருட் களை பெருக்கி தங்களுக்கென்று சேர்த்து வைக்கின்றார்கள். தாங்கள் உண்டு, குடித்து, உல்லாசமாக, இடா ம்பீகரமான மாளிகைகளிலே வாழ்கி ன்றார்கள். தாங்கள்மாத்திரம் தேசத் தின் நடுவில் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற்போகு மட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டு கிறார்கள் (ஏசாயா 5:8). ஓடும் நதி, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றி யாவருக்கும் பலன் கொடுக்கின்றது. ஆனால் மிகையாக தங்களுக்கென்று சேர்த்து வைக்கின்றவர்களின் செல்வம் ஏழைகளின் வாழ்விற்கு ஆதரவை வழங்குவதில்லை. மாறாக குட்டையிலே தேங்கி நிற்கும் தண்ணீரைப் போல, அந்த ஐசுவரியம் அவர்களுக்கு மட்டுமே சேர்த்து வைக்கப்படுகின்றது. காலப்போக்கிலே, அந்த ஐசுவரியம் இந்த உலகத்தின் போக்கின்படி அவர்களுக்கு பெயரையும், புகழையும் வழக்கினாலும், அது அவர்களுடைய வாழ்க்கையிலும், அவர்களுடைய சந்ததியினருடைய வாழ்க்கையிலும் அழுக்கையும், நாற்றத்தையும் ஏற்படுத்தும். பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவ தில்லை. செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவ தில்லை (பிரசங்கி 5:10). தேவ ஜனங்கள் வனாந்திரத்திலே மோசேயோடு இருந்த நாட்களிலே, வானத்திலிந்து மன்னா அவர்களுக்கு போஜனமாக கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவனும் தனது தேவையின் அளவின்படி சேர்க்க வேண்டும். அதிகமாய் சேர்த்தவைகள் மறுநாளிலே நாற்றமெ டுத்தது. எனவே, சமநிலைப் பிரமாணத்தின்படியே, வருங்காலத்திலே வறுமைப்பட்டவர்களின் செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக. சுத்தமான, தெளிந்த, நதியை போல உங்கள் வாழ்க்கை ஏற்றதாய் காணப்படுவதாக.

**2 கொரிந்தியர் 8:13**

மற்றவர்களுக்குச் சகாய மும் உங்களுக்கு வருத்த மும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாக வே சொல்லுகிறேன்.

**ஜெபம்**: ஆலோசனையில் ஆச்சரியமான தேவனே, ஐசுவரியத்தின் மயக்கத்தினால் நான் என் இருதயத்தை கெடுத்துக் கொள்ளாதபடிக்கு உம்முடைய ஆலோசனையின்படி நடக்கும்படி எனக்கி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன். ஆமென்.

# நித்திய ஆசீர்வாதம்

நான் உத்தம இருதயத்தோடு கர்த்தருக்கு பயந்து அவருடைய ஆலோசனைகளின்படி நடந்தேன். கர்த்தர் என் எல்லைகளை விரிவாக்கினார். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் அதன்படி என் வாழ்விலே ஐசுவரியத்தை பெருகப் பண்ணினார் என்று ஒரு விசுவாசியானவன் கூறிக் கொண்டான். நான் என்னிடம் இருந்தெல்லாவற்றையும் வாரியிறைத்தேன். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரித்து வருகின்றேன். மேலதிகமாக எனக்கென்று எதையும் நான் வைத்திருப்பதில்லை. கர்த்தர் என் வாழ்விலே இரக்கத்தின் ஐசுவரியமுள்ளவனாக இருக்கும்படி என்னை ஆசீர்வதித்தார் என்று இன்னுமொருவன் கூறிக் கொண்டான். நான் ஏழை. என்னிடத்தில் ஒன்றுமில்லை. கர்த்தரே ஏழைகளுக்கு பெலனும், எளியருக்கு திடனுமாயிருக்கின்றார். அவர் என்னை விசுவாசித்திலே ஐசுவரியமுள்ளவனாக்கும்படி என்னை ஆசீர்வதித்தார் என்று வேறொருவன் கூறிக் கொண்டான். இந்த மூன்று விசுவாசிகளும் தங்கள வாழ்வின் கடந்த கால அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். அவர்கள் கூறிய வற்றில் உண்மை உண்டு. இப்படியாக பலர் வெவ்வேறான அனுபவங்களை கூறிக்கொண்டார்கள். சில சந்தர்ப்பங்களிலே ஏழைகள், ஐசுவரி யமுள்ளவர்களை விமர்சிக்கின்றார்கள். வேறு சில சந்தர்ப்பங்களிலே ஐசுவரியவான்கள் ஏழைகளின் வறுமையை குறித்து விமர்சிக்கின்றார்கள். இன்னும் சிலர் ஏழைகளின் வறுமையையும், ஐசுவரியவான்களின் செல்வத்தையும் விமர்சிக்கின்றார்கள். இப்படியாக சிலர் தங்கள் வரங்கள மற்றும் கிரியைகளை குறித்து மேன்மை பாராட்டுகின்றார்கள். அபப்டியானால் யார் கர்த்தருடைய நித்திய ஆசீர்வாதத்தை பெற்றவன்? யார் அவருடைய கூடாரத்தில் தங்குவான்? யார் அவருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? அவன் யாராக இருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்விலே செய்கின்றவனே, கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் என்றென்றும் நிலைத்திருப்பான். அதுவே கர்த்தரால் உண்டாகும் நித்திய ஆசீர்வாதம். எனவே இந்த உலகத்தில் நாம் இருக்கும் நிலையைக் குறித்து மேன்மைபாராட்டாமல், எல்லா சூழ்நிலையிலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே நமது நோக்கமாக கொண்டிருப்போமாக.

**மத்தேயு 7:21**

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல்,

**ஜெபம்:** நித்திய ஆசீர்வாதத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, என்னிடத்தில் மேன்மை ஒன்றுமில்லை. நீர் என்னோடு இருப்பதே என் மேன்மை. நீர் என்னை உம்முடைய நித்திய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மகா பெரிய பிரச்சனை என்ன?

நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகிலே, உங்கள் வாழ்க்கையிலே சவால்களையும், பிரச்சனைகளையும் எதிர்நோக்காத மனிதர்கள்யார்?சமாதானமும்சௌக்கிமும் உண்டென்று சில மனிதர்கள் சொல்லும்போது, கணப்பொழுதிலே பயங்கரங்கள் அவர்கள் வாழ்வை சூழ்ந்து கொள்கின்றது. உங்களுடைய வாழ்க்கையிலே உங்களை எதிர் நோக்கும் மிகப்பெரிதான பிரச்சனை என்ன? அது எதைக் குறித்ததாக இருக்கின்றது? அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் சார்ந்தவைகளா? உங்களது அல்லது உங்கள் பிள்ளைகளது கல்வி, செல்வம், அந்தஸ்துக் களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதா? எடுத்துக்காட்டாக, ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே அவன் மனதுக்கமடைந்தவனாக இருந்தான். அந்த துக்கத்தின் காரணம் என்ன என்று அவனைக் கேட்ட போது, தன்னிடம் பணம் இல்லை என்பதே அதன் காரணம் என அவன் கூறினான். ஆண்டுகள் கடந்து சென்று அவன் ஐசுவரியமுள்ளவனானான். அவனுடைய துக்கம் தீர்ந்து போய்விட்டது. ஆனால் அது அநேக நாட்களுக்கு நிலைக்கவில்லை. தனக்குண்டான செல்வத்தினால் தன் மகனானவன், பொறுப்பற்றவனாக நடந்து, அவன் கெட்டுப் போய்விட்டான் என்று மிகவும் கவலையடைந்தான். இப்படியாக மனிதர்களின் மனம் இல்லாததைக் குறித்து துக்கமடைகின்றது. தங்களிடத்தில் இல்லாதது தங்களுக்கு வரும்போது தங்கள் வாழ்க்கை எப்படியாக மாறிவிடும் என்பதை அறியாதிருக்கின்றார்கள். எனவே நாம், நம்முடைய நாட்களை அறிந்தவராகிய கர்த்தரின் ஆலோசனைகளை நன்றாக கவனித்து, தியானித்து, அவைகளின்படி நடக்க நம்மை ஒப்புக் கொடுப்பதே, நமக்கு வாழ்விற்கு எக்காலத்திலும் நன்மையாக இருக்கின்றது. நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன் ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்துதிரிகிறதையும் நான் காணவில்லை என்று சத்தியவேதம் கூறுகின்றது. எனவே, இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்தங்களுக்கு இடங் கொடுக்காமல், காலத்தை அறிந்த கர்த்தரிடம் உங்கள் சிந்தையை ஒப்புக் கொடுங்கள். கர்த்தருடைய ஆலோசனையே நித்திய காலமாய் நிலை நிற்கும். கர்த்தர் நம் பட்சத்தில் இருப்பதினால், பெரும்புயல் உங்கள் வாழ்க்கையை அடித்து மோதினாலும், நீங்கள் அசைக்கப்படுவதில்லை.

**சங்கீதம் 33:11**

**கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்**

**ஜெபம்**: என் காரியத்தை வாய்க்கப்பண்ணும் தேவனே, இந்த உலக கவலைகளினால் என்னுடைய இருதயம் பாரமடையாதபடிக்கும், நான் கண்ணியிலே சிக்கிவிடாதபடிக்கும் என் ஆத்துமாவை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்முடைய பார்வை

உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு முன்பாக நிற்கும் மலைபோன்ற பிரச்சனையை எந்தக் கண்களால் பார்க்கின்றீர்கள்? இந்த கேள்வியானது, இந்த உலக போக்கிலே வாழ்பவர்களுக்கு ஒருவேளை நகைப்பாக இருக்கலாம். ஆனால், ஆண்டவர் இயேசுவை பற்றியிருக்கும் நமக்கு, மாம்ச கண்கள் மட்டுமல்ல, மனப்பிரகாசமுள்ள மனக் கண்களும் உண்டு. அந்த மனக்கண்கள் நம்முடைய விசுவாசத்தின் கண்களாக இருக்கின்றது. மாம்ச கண்களால் அதாவது இந்த உலகத்தின் முறைமையின்படி பிரச்சனைகளை நோக்கிப் பார்க்கின்றவர்களுக்கு இந்த உலகத்தினால் உண்டாகும் பயமும் திகிலும் சூழ்ந்து கொள்கின்றது. ஆவிக்குரிய விசுவாசக் காண்களால் தங்கள் சூழ்நிலைகளை பார்க்கின்றவர்கள், ஆவிக்குரிய உலகத்தின் திட நம்பிக்கையும் தைரியத்தையும் பெற்றுக் கொள்கின்றார்கள். ஒரு சமயம், சமஸ்த இஸரவேல் ராஜ்யத்தையும் கலங்கச் செய்யும் ஒரு மகா பெரிதாக பிரச்சனையொன்று அவர்களை எதிர்நோக்கிது. பெலிஸ்திய நாட்டைச் சேர்ந்த கோலியாத் என்னும் ஒரு இராட் சதன், இஸ்ரவேலின் ராஜாவையும், போர்வீரர்களையும், சகல ஜனங்களையும் கலங்கடித்துக் கொண்டிருந்தான். இஸ்ரவேலிலே இருந்த இளைஞனாகிய தாவீது மட்டும் அந்த இராட்சதனைக் கண்டு பயமடையவில்லை. இஸ்ரவேலர் எல்லாரும் அந்த கெம்பீரமான தோற்றமுடைய பெலிஸ்திய போர்வீரனை காணும்போது அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போவார்கள். ஆனால் அந்த இராட்சதனின் பயங்கரமான தோற்று த்தினால் தாவீது சற்றும் தயங்கவில்லை. இந்த இராட்சதனின் நிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை. என்று தாவீது அறிக்கையிட்டான். அந்த பெலம் ஏன் மற்றவர்களுக்கு வரவில்லை? அந்த பெலன் அவனுக்கு எப்படி வந்தது? தேவனாகிய கர்த்தர் தாவீ தோடு இருந்தார். தாவீது தேவன்மேல் விசுவாசமாயிருந்தான். அதனால், மற்றவர்கள் கண்களில் மகா பெரிதாக தோன்றிய பிரச்சனை, வாலிப னாகிய தாவீதின் கண்களில் மிகவும் அற்பமாகத் தோன்றியது. எனவே, உங்களை அழுத்தும் சூழ்நிலைகளை உங்கள் மாம்ச கண்களால் பார்க்காமல், ஆவிக்குரிய விசுவாசக் கண்களால் பாருங்கள். தடைகளை உடைக்கும் சர்வ வல்லமையுள்ள தேவன் உங்கள் பட்சத்தில் இருக்கின்றார்.

**ரோமர் 8:31**

தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

**ஜெபம்**: கலங்காதே திகையாதே நான் உன்னோடு கூட இருக்கின்றேன் என்று கூறிய தேவனே, சூழ்நிலைகளை மாம்ச கண்களால் நோக்காமல், விசுவாச கண்களால் பார்த்து அவைகளை ஜெயிக்க பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சிறிய ஆரம்பம்

ஒரு குடும்பத்திலே இருந்த பிள்ளைகளிலொருவன், எப்போதும் இல்லாததை குறித்து முறுமறுக்கின்றவனாக இருந்து வந்தான். மிகவும் சிறிதாக தொடங்கிய அந்த சுபாவமானது, குழந்தைப் பருவத்திலே, பார்ப்பதற்கு இரசனைக்குரியதாக இருந்தது. அவன் தந்தையானவர் அவனுடைய சிறு பிரயாத்திலிருந்து அவனை நோக்கி: மகனே, நம்மிடம் இல்லாதவைகளைக் குறித்து நொந்து கொள்வதை விட்டுவிட்டு, நம்மிடம் இருப்பவைகளுக்காக நன்றியறிதலுள்ளவனாக இரு என்று பல முறை ஆலோசனைகள் கூறினாலும், அவன் தன் முறுமுறுப்பினால், பெற்றோர் தான் கேட்பவைகளை கொடுத்து விடுவார்கள் என்று எண்ணி முறுமுறுப்பையோ விட்டுவிடாதிருந்தான். ஆனால், அந்த சுபாவமானது அவனோடுகூட வளர்ந்து, வாலிபப் பிராயத்திலே நெருஞ்சிமுள்ளைப் போல, எப்பக்கம் தொட்டாலும் அவன் கசந்து முறுமுறுப்பவனாக கொள்கின்றவனாக இருந்தான். பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசுவின் சீஷர்களாக அழைக்கப்பட்ட நம்முடைய வாழ்க்கையானது நன்றியறிதலுள்ள வாழ்க்கையாக இருக்க வேண்டும். நம் இருதயத்திலே நிறைந்திருப்பது எதுவோ, அதுவே நம் வாழ்க்கையிலே வெளிப்படும். எனவே நம்முடைய இருதயத்திலே தேவன் நமக்கு கொடுத்தவைகளைக் குறித்த நன்றி எப்போதும் இருக்க வேண்டும். நன் மையான சுபாவங்களும், தீமையான சுபாவங்களும், மனிதர்களுடைய வாழ்க்கையிலே சிறிய காரியங்களிலேயே ஆரம்பிக்கின்றது. அவை இரண்டும் ஆரம்பத்திலே அற்பமாகவே தோன்றும். நாளடைவிலே அவை வளர்ந்து பெரும் விருட்சமாகிய அதனதன் கனியைக் கொடுக்கும். நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந் தந்த மரம் அது தன் கனியினால் அறியப்படும் முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செடியில் திராட் சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை. நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான் பொல் லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான் இருதயத்தின் நிறைவினால் அவ னவன் வாய் பேசும் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே நம்முடைய வாழ்க்கையிலே நாம் எதை வளர்க்கின்றோம் என் பதைக் குறித்து நாம் எச்சரிக்கயையுள்ளவராக இருக்க வேண்டும். அத் தோடு, நம் வாழ்க்கையைக் குறித்து கூறப்படும் தேவ ஆலோசனைக ளைக் நாம் கேட்டு அதன்படி வாழ நம்மை நாம் ஒப்புக் கொடுப்போமாக.

**லூக்கா 6:45**

இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, நான் என் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்து, அதிலே ஜீவ ஊற்று புறப்படும்படியாய் உம் வார்த்தையின் வழியிலே வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத் தை தந்தருள்வீராக. இர ட்சகர் இயேசு வழியாக

ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ளுங்கள்

# கவலைகளும் பாரங்களும்...

இவ்வுலகிலே சவால்கள், பாடுகள், துன்பங்கள் இல்லாத வாழ்க்கை உண்டா? வாழ்க்கையை அழுத்தும் பாரங்கள் இருதயத்தை சோர்ந்து போகப் பண்ணிவிடுகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே மனிதர் களை சுற்றி நெருக்குகின்ற பாவங்கள் அவர்களை மேற்கொண்டுவிடுகி ன்றது. ஆண்டவர் இயேசுவின் சீஷர்களாகிய, எமது வாழ்க்கையிலும், இவைகள் விதிவிலக்கானவைகள் அல்ல. நித்திய வாழ்வை பெறும்படி பரம தேசத்தை நோக்கி பயணம் செய்யும் நாம், எம் வாழ்வில் உண் டாகும் பாரங்களை சுமந்து திரிகின் றவர்களா? அல்லது அவற்றை இற க்கி வைப்பவர்களா? நெருக்குகி ன்ற சூழ்நிலைகளை மேற்கொள்கி ன்றவர்களா? அல்லது அவைகள் நம்மை மேற்கொள்ளும்படி அவற் றிற்கு ஒப்புக் கொடுக்கின்றவர் களா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

**ரோமர் 8:37**

**இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிற வராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கி றோமே.**

நாம் பாரங்களை கர்த்தருடைய பாதத்திலே இறக்கி வைக்கும் போது ஆறுதல் அடைகின்றோம். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங் கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப் பாறுதல் தருவேன் என்று ஆண்டவர் இயேசு அழைக்கின்றார். அந்த அழைப்பை ஏற்று வந்தபின்பும் பாரங்களை ஏன் சுமக்கின்றீர்கள்? பார மான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிரு க்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறு மையோடே ஓடும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நாளைக்காக ஏன் கவலையடைகின்றீர்கள்? தேவ சமாதானம் உங்கள இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக் கொள்ளும்படி, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங் கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை கலக்கமடைந் தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறது மில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. ஜெயங் கொடு க்கும் தேவன் நம்மோடு இருக்கின்றார். எனவே, பாரங்களை தூக்கி சுமக்காமலும், கவலைகளை மனதிலே வைத்திருக்காமலும், கர்த்தரு டைய பாதத்திலே இறக்கி வைத்து விடுங்கள். அவர் உங்களை ஆதரி த்து வழிநடத்திச் செல்வார்.

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, உமது வேதம் என் மனமகிழ்ச்சியா யிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன். அடியேன் உமது ஆலோசனையின் வழியில் நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மறவாமல் நினைக்கின்ற தெய்வம்

முதிர்வயதும், நரை மயிருமாக காணப்பட்ட வயோதிபரொருவர், தவறாமல் ஆலயத்திற்கு சென்றுவருவது அவருடைய வழக்கமாக இருந்து வந்தது. தன் சரீரத்தில் பெலன் ஒடுங்கிக் கொண்டு போவதையும், தன் நடையின் வேகம் குறைவதையும், தன் கால்கள் தள்ளாடும் நிலையிலுள்ளது எனபதையும் பொருட்படுத்தாமல், ஆராதனை தொடங்குவதற்கு முன்னதாகவே தான் ஆலயத்தில் காணப்பட வேண்டும் என்று காலையிலே நேரத்தோடு தன் பயணத்தைஆரம்பித்துவிடுவார். ஒரு நாள் அவர் ஆலயத்திற்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது.

**ஏசாயா 46:4**

**நரைவயதுமட்டும் நான் உங்களைத் தாங்குவேன்**

ஆலயத்திலே நூற்றுக் கணக்கான ஜனங்கள் வருகை தந்திருந்த போதும், ஆலயத்தின் மேய்ப்பரின் கண்கள் அந்த வயதான ஐயாவை தேடியது. அவரைக் காணவில்லை. ஆராதனை முடிந்த பின்பு, துரித மாக அவர் வாழ்ந்த வீட்டிற்கு சென்றார். கட்டிலிலே படுத்திருந்த அந்த முதியவர், சிரித்த முகத்தோடு, மேய்ப்பரை வரவேற்றார். அவருடைய சரீரம் பெலவீனமடைந்ததால், அவருக்கு ஆலயத்திற்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனால் ஆலயத்தின் மேய்ப்பரோ, கிழமை தோறும் அவரை காணும்படி அவருடைய வீட்டிற்கு சென்று, ஜெபம் செய்து, அவரோடு உரையாடி வருவது வழக்கமாயிற்று. ஆம் பிரியமானவர்களே, அந்த மேய்ப்பரானவரைப் போலவே, நம்முடைய பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவுமிருக்கின்றார். நம்முடைய பெலவீனங்களிலே நம்மை தள்ளிப்போடாமல், நம்முடைய குறைவுகளினாலே அவர் நம்மை அற்பமாக எண்ணாமலும், நம்மை தேடிவருகின்ற ஒரே தெய்வமாகஇருக்கின்றார். அவருடைய சீஷர்கள் அவரைச் சார்ந்திருந்தார்கள். அவர்கள் எங்கிருந்தார்களோ, அங்கே அவர்களை தேடிச் ஆண்டவர் இயேசு சென்றார். நற்செய்தியின் நிமித்தம் அவருடைய சீஷர்கள் சிறைப்படுத்தப்பட்ட போது, அங்கே அவர்களை தேடிச் சென்றார். ஆம், தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைத் தாங்கி வருகின்றார். தம்முடைய ஜனங்களை நோக்கி: உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்வேன் நரைவயதுமட்டும் நான் உங்களைத் தாங்குவேன் நான் அப்படிச் செய்துவந்தேன் இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் என்று வாக்குரைத்திருக்கின்றார். பெலனுள்ள நாட்களிலே அவரை தேடுங்கள். அவரையே எப்போதும் சார்ந்து வாழுங்கள். அவர் தம்முடையவர்களை ஒருபோதும் கைவிடமாட்டார்.

**ஜெபம்**: மறவாமல் என் நினைவாய் இருக்கும் தேவனே, நான் என் வாழ்நாட்கள் முழுவதும் உம்மை பற்றிக் கொண்டு, நீர் காட்டும் வழியிலே நடக்க எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தளர்ந்து போய்விடாதிருங்கள்

மனிதர்களின் சிறுமையும் எளிமையுமான நாட்களிலே, அவர்களுக்கு ஆதரவாக இருந்து வந்தேன். கைமாறு கருதாமல் பல உதவிகளை செய்து வந்தேன். நன்மையேயன்றி அவர்களுக்கு தீமை எதையும் நான் நினைத்ததில்லை. அவர்களிடமிருந்து நன்றியறிதலையும் நான் எதிர் பார்த்தது இல்லை. ஆனால், அவர்களுக்கு வசதிகள் பெருகிய போது, நன்மைக்கு தீமை செய்தார்கள். இத்தனை வருடங்களாக கற்ற பாடங்கள் போதும். இறுதியிலே மிஞ்சியது நம்பிக்கை துரோகமும் ஏமாற்றமும் (disappointment) மட்டுமே. இனி நான் என்பாட்டை பார்த்துக் கொள்வேன் என்று ஒரு விசுவாசியானவன் தன் மனவேதனையை மேய்ப்பரொருவரிடம் கூறிக் கொண்டான். அதற்கு அந்த மேய்ப்பனானவர் தம்பி: நீ கூறுவதில் உண்மை உண்டு. ஆனால், நமக்காக தன் ஜீவனை கொடுத்த ஆண்டவர் இயேசுவுக்கு நீ ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்யவில்லை. வேதனை உண்டாக்கும் வழியிலே நீ நடக்கவில்லை என்றால், நீ செய்து வந்த நன்மைகளையும் உத விகளையும் நிறுத்திவிடு என்று கூறினார். அன்றிரவு, அந்த வார்த்தைகள் அந்த விசுவாசியானவனுடைய மனதிலே கிரியை செய்தது. கர்த் தராகிய இயேசு தன்மீது எவ்வளவு பொறுமையுள்ளவராக இருக்கின்றார் என்பதை சிந்தித்துப் பார்த்து, அவருக்கு நன்றியை செலுத்தினான். நற்கனியை கொடுக்கும் மரமானது, மனிதர்களுடைய செயற்பாடுகளினாலே, தன் கனியின் சுவையை தான் மாற்றிக் கொள் ளாது. அதனிடத்திலே கனியை பறிக்கும் சன்மார்க்கனுக்கும், துன்மார்க்கனுக்கும், தேவபக்தியுள்ளவனுக்கும் அது ஒரேவிதமான நற்கனியைக் கொடுக்கும். எனவே, மாறிப்போகும் மனிதர்களின் கிரியைகளை மையமாக வைத்து, தேவன் தந்த திவ்விய சுபாவங்களை மாற்றிக் கொள்ளாதிருங்கள். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம். உங்கள் தீபம் அணையாதிருப்பதாக. உங்களுக்குள்ளே அது பற்றியெரியும்படி அனல்மூட்டி எரியவிடுங்கள். பூமிக்கு உப்பாயிருங்கள். மற்றவர்களுடைய செயற்பாடுகள் உங்கள் உப்பின் சாரத்தை இழக்கப் பண்ணாமல் தேவன்தாமே உங்கள் சிந்தையைக் காத்துக் கொள்வாராக.

**கலாத்தியர் 6:9**

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

**ஜெபம்:** என்மேல் நீடிய பொறுமையாயிருக்கும் தேவனே, நான் நற்கிரியைகள் செய்வதில் ஒரு போதும் சோர்ந்து போகாமல் இருக்கும்படிக்கு நீர் என்னை பெலப்படுத்தி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எனக்கு நியமிக்கப்பட்ட ஓட்டம்

**பிலிப்பியர் 3:14**

பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த குடியானவன், தன் குடும்பத்தின் பிழைப்புக்காக தோட்டம் செய்து வந்தான். நிலத்தை பண்படுத்துவதிலிருந்து, அறுவடைகளை சந்தைப்படுத்தும் நாள்வரைக்கும் கடினமாக உழைத்து வந்தான். அதுவே அவனுடைய நோக்கமாக இருந்து வந்தது. ஒரு நாள் அவனுடைய உறவினர்களிலொருவன் அந்த குடியானவனை சந்தித்துப் பேசினான். அந்த உறவினன் பேசுகையில்: அயலிலுள்ள பிறனுடைய தோட்டத்தைப் பார்த்தையா? எவ்வளவு செழிப்பாக காட்சியளிக்கின்றது என்று பிறனுடைய தோட்டத்தைப் பற்றி பேசிய பின்பு, தன் வழியே போய்விட்டான். தானும் தன் வேலையுமாக இருந்த குடியானவனின் மனதிலே, இப்போது, பிறனுடைய தோட்டத்தைப் பற்றிய வித்து விதைக்கப்பட்டது. சில நாட்களாக, அவன் பிறனுடைய தோட்டத்தை அதிகமாக நோக்கிப் பார்க்க ஆரம்பித்ததால் இப்போது அவன் முகநாடி வேறுபட ஆரம்பித்தது. மனதிலே எரிச்சலின் ஆவி கிரியை செய்யத் தொடங்குவதை உணர்ந்து கொண்ட அந்த குடியானவன், இதை இப்படியே விட்டால் விபரீதமாகிவிடும் என்று, மறு நாள் காலையிலே அந்த பிறனுடைய வீட்டிற்கு சென்று, அவனுடைய பிரயாசத்தை பாராட்டி, தன்னுடைய தோட்டத்தை பராமரிப்பதற்கு தனக்கும் ஆலோசனைகளும் அறிவுரைகளும் தரும்படி கேட்டுக் கொண்டான். ஆம், பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும் பிரதானமான ஒரு நோக்கம் உண்டு. நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதே அந்த நோக்கமாகும். அந்த யாத்திரையின் வழியிலே, மேலே குறிப்பிடப்பட்ட உறவினன் போன்ற வழிப்போக்கர்களை நாம் சந்திக்க நேரிடலாம். சில வேளைகளிலே வழிப்போக்கர்கள் நம்முடைய நோக்கத்தை திசைதிருப்பும்படியாக காரியங்களை செய்யலாம் அல்லது கூறலாம். ஆனால் நாமோ,நம்முடைய இலக்கிலிருந்து கண்களை எடுத்துக் கொள்ளாமல் பாதுகாக்க வேண்டும். கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடுக்க பழகிக் கொள்ளுங்கள். தீமையை உங்கள் சிந்தையில் விதைக்கின்ற மனிதர்களைக் குறித்து மிக மிக எச்சரிக்கையாய் இருங்கள். அவர்களுடைய வழிகளுக்கு உங்களை உட்படுத்தாதிருங்கள். நல்ல ஆலோசனைகளை பற்றிக் கொள்ளுங்கள். ஆகாத நோக்கம் சிந்தைகளை உங்களை விட்டு அகற்றி விடுங்கள். மற்றவர்களுடைய செயற்பாடுகளினாலே உங்கள் மனட்சாட்சியை கெடுத்துக் கொள்ளாதிருங்கள். கர்த்தர் உங்களுக்கு நியமித்த ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுங்கள்.

**ஜெபம்**: பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக என்னை அழைத்த தேவனே, ஆகாத நோக்கங்களுக்கு நான் இடங் கொடுக்காமல், நியமித்த ஓடத்தில் பொறுமையோட ஓடும்படி கற்றுத் தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இன்னும் கொஞ்சக் காலம்

சிறிய கிராமமொன்றிலே வாழ்ந்து வந்த ஜனங்கள், தமது வாழ்வாதாரம் கருதி, அந்தக் கிரமத்திலிருந்து இடம் பெயர்ந்து, வேறொரு ஊருக்கு கால்நடையாக சென்று கொண்டிருந்தார்கள். செல்லும் பாதையானது காடும், மலையும் சார்ந்ததாக இருந்தது. பல சிரமங்கள் மத்தியிலே, சகிப்புத் தன்மையோடு, அநேக நாட்களாக பயணம் செய்து கொண்டிருந்தார்கள். நாட்கள் பல கடந்து சென்றபின்பு, அங்கிருந்த சில குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு, கடும் வாக்குவாதமாகி, அவர்களுக்கிடையே பிரிவினை உண்டாயிற்று. அவர்கள் மத்தியிலே இருந்த முதியவரொருவர், அவர்களை நோக்கி: பிள்ளைகளே நான் சொல்வதை கவனமாக கேளுங்கள். நாம் யாவரும் ஏறத்தாழ பயணத்தின் முடிவுக்கு வந்து விட்டோம். இன்னும் சில நாட்களிலே நாம் செல்ல வேண்டிய ஊருக்கு சென்றடைவோம். இதுவரை எவ்வளவாய் பிரயாசப்பட்டீர்கள். எத்தனை கஷ்டங்களை சகித்துக் கொண்டீர்கள். பலனை அறுவடை செய்யும் நாள் சமீபித்திருக்கும் போது, ஏன் இந்த குழப்பம்? இன்னும் கொஞ்ச நாட்களுக்கு ஏன் நீங்கள் பொறுமையாக இருக்கக்கூடாது என்று அவர்கள் உற்சாகப்படுத்தி அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடிச் சென்று கொண்டிருக்கின்றோம். இந்த பூமியிலே பல சவால்கள் உண்டு. தனி மனிதனின் மனதிலேயே பல்வேறுபட்ட யோசனைகள் தோன்றும். காரியம் அப்படியாக இருக்கும் போது, பல ஜனங்கள் கூடியிருக்கும் இடங்களிலே, கருத்து முரண்பாடுகளும், வாக்குவாதங்களும், கலகங்களும் உண்டாக சாத்தியங்கள் பல உண்டு. நீங்களே உங்கள் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் இதுவரைக்கும் பல பிரயாசங்களை பட்டிருப்பீர்கள். பல தியாகங்கள் செய்திருப்பீர்கள். பல காரியங்களை சகித்துக் கொண்டிருப்பீர்கள். அவையெல்லாவற்றையும் மறந்து அற்ப காரியங்களுக்காக பிரிவினைகளை ஏற்படுத்தாமல், இன்னும் கொஞ்சக் காலம் கர்த்தருடைய நாமத்திலே சகித்துக் கொள்ளுங்கள். இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது என்று கர்த்தர் கூறியிருக்கின்றார். எனவே, உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

**2 கொரிந்தியர் 4:17**

**அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிக மான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஜெபம்**: அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கின்ற தேவனே, பெற்ற பணியை பொறுமையோடு நான் செய்து முடிக்கும்படி எனக்கு பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | வைகாசி 19 | 📖 மாலை வாசகம் - சங் 139:1 -10

# யாருடைய குற்றம்?

கடைக்குச் சென்றமனிதனானவன், தன் வாகனத்தை தரிப்பிடத்திலிருந்து பின்புறமாக ஓட்டும் போது, தரிப்பிடத்திலிருந்த மின்குமிழ் கம்பத்திலே அடித்துவிட்டான். அதனால் அவனுடைய வாகனத்தின் பின்புறத்திலே கணிசமான சேதம் ஏற்பட்டிருந்தது. சில நாட்களுக்கு பின், அந்த சேதத்தோடு அவன் தன் வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது, அவனுக்கு பின்னாக வாகனத்தை ஓட்டி வந்த சாராதியானவனொருவன், குறித்த நேரத்திற்குள் வேகத்தை, குறைத்து, கட்டுபடுத்த முடியாமல், அந்த மனிதனாவனுடைய வாகனத்தின் பின்புறத்தில் அடித்து விட்டான். வாகனத்திலிருந்த கணிசமான சேதத்தோடு, தற்போது மேலும் சிறிய சேதம் ஏற்பட்டது. அந்த மனிதனானவனுக்கு பின்பாக வந்த சாரதி, உடனடியாக, அந்த மனிதனானவனை நோக்கி: இது என்னுடைய தவறு. என்னாலே உன் வாகனத்தில் பெரிதான சேதம் ஏற்பட்டிருக்கின்றது. முழு சேதத்தையும் திருத்துவதற்கு நான் அதற்குரிய பணத்தை கொடுக்கின்றேன் என்றான். தன் வாகனத்தின் பின்புறத்திலே ஏற்பட்ட முழு சேதமும் அந்த சாரதி யினால் ஏற்படுத்தப்படவில்லை என்பதை நன்கு அறிந்திருந்த அந்த மனிதனானவன், தன் தவறினால், வாகன தரிப்பிடத்திலே ஏற்பட்ட சேத த்தை குறித்து ஏதும் பேசாமல், தனக்கு பின் வந்த சாரதியிலே முழுத் தவறையும் போட்டுவிட்டான். இவ்வண்ணமாகவே இன்று சில மனி தர்கள் தங்கள் தவறுகளால் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவுகளை மறைத்து வைத்திருக்கின்றார்கள். சபையிலோ, சங்கத்திலோ ஏதாவது சிறிய தவறு ஏற்படும் வரை காத்திருந்து, தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட எல்லா பின்னடைவுக்கும் சபை அல்லது சங்கத்திலே பழியை போட்டுவிடுகின்றார்கள். இதனால் அவர்கள் சக விசுவாசிகள் மத்தியில் கருத்து முரண்பாடுகளையும் பிரிவினைகளையும் ஏற்படுத்த காரணராகிவிடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் சொற்ப காலம் தங்களை நீதிமான்களாகவும், மற்றவர்களுடைய தவறுகளினால் தாங்கள் பலியாடுகளைப் போலானோம் என்று காண்பித்துக் கொள்கின் றார்கள். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன், மனிதனுடைய சிந்தையை அறிவார். தேவனுக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. எனவே ஏற்றகாலத்திலே தன் பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவி டுகின்றவன் தேவனிடத்திலிருந்து இரக்கத்தை பெறுகின்றான். விசுவா சிகள் மத்தியிலே நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துகின்றான்.

**நீதிமொழிகள் 28:13**

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

**ஜெபம்:** என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கின்ற தேவனே, என் குற்றங்களை நான் உணர்ந்து பாரமுகமாக விட்டுவிடாமலும், அதை மற்றவர்கள் மேல் சுமத்தாமலும் இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | வைகாசி 20

📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 2:1–5

# தேவ கிருபையை நாடுங்கள்

ஒரு தகப்பனானவர் தன் மகனானவனிற்கு, நல் வாழ்வை கண்ட டையும்படி பல முறை புத்தியை தெளிவிக்கும் அறிவுரைகளையும், தய வான ஆலோசனைகளயும் கூறியிருந்தார். தன் மகனானவன், அவை களை அற்பமாக எடுத்துக் கொள்கின்றான் என்று கண்டபோது, தவறான தீர்மானங்களால் வரக்கூடிய விப ரீதங்களைக் குறித்து அவனுக்கு எச்சரிப்பைவழங்கிவந்தார். அதை க்குறித்தும் அவன் பொருட்படுத் தாமல் தன் வழியிலே வாழ்ந்த போது வாழ்விலே பல பிரச்சனை களையும் அவைகளால் பல பின் னடைவுகளையும் சந்திக்க நேரி ட்டது. இவ்வாறகவே விசுவாசிக ளுடைய வாழ்கையிலும் சில பிரச் சனைகள் அவர்களுடைய சொந்த தீர்மானங்களால் உண்டாகின்றது. வேறு சில பிரச்சனைகள் அவர்கள் தீங்கேதும் நினையாதிருக்கின்ற வேளையிலே அவர்களுக்கெதிராக வருகின்றது. ஆனால் விசுவாசிகள் அவை யெல்லாவற்றின் காரணத்தையும் ஒன்றில் பிசாசின்மேல் போட்டு விடுகின்றார்கள் அல்லது தேவன் ஏன் என்னை இப்படி சோதிக்கின்றார் என்று தேவனையே நொந்து கொள்கின்றார்கள். தங்கள் சொந்த தவறுகளை மறைத்துக் கொள்வதால், சபைகளிலே மற்றவர்கள் இடறிப் போகத்தக்கதான வழிகளை உண்டு பண்ணிவிடுகின்றார்கள். தாவீது என்னும் தேவனுடைய தாசனின் வாழ்க்கையிலே வந்த துன்பங்கள் ஏராளம். ஆனால், தாவீதின் தனிப் பெரும் சிறப்பம்சம் என்னவென்றால், தன் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களுக்கு தன் தவறான தீர்மானங்களே காரணம் என்று உணர்ந்து கொள்ளும் போது, முதலாவதாக, அவன் அதை ஏற்றுக் கொண்டான். அந்த தவறான தீர்மானங்களை குறித்து மனம்வருந்தி தேவனை அண்டிக் கொண்டு அவருடைய கிருபையை நாடினான். தன் தவறுகளை மறைக்காமல், இந்நாட்களில் நாம் அதை நமக்கு படிப்பினையாக கொள்ளும்படி வெளிப்படையாக அறிவித்திரு க்கின்றான். பிரியமானவர்களே, ஒருவன் தன் வாழ்க்கையில் தவறு செய்வது ஒரு விஷயம், அதை அவன் மூடிமறைத்து, அதனால் மற் றவர்கள் மத்தியிலே இடறல்களை உண்டாக்குவது, தான் செய்த பாவ த்தோடும், அவன் பல சாபங்களை தன்மேல் ஏற்றிக் கொள்கின்றான். (மத் 18:6-7). எனவே, நம்முடைய தவறுகளால் இடறல்களை உண்டாக் காதப டிக்கு நாம் நம் ஆத்துமாவை அழிவுக்கு காத்துக் கொள்வோமாக

**சங்கீதம் 51:1**

**தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.**

**ஜெபம்:** ஒருமைப்பாட்டில் தேறுங்கள் என்று சொன்ன தேவனே, நான் சக விசுவாசிகள் மத்தியிலே குழப்பங்களையும் பிரிவினைகளையும் ஏற்படு த்திவிடாதபடிக்கு என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்முடைய சிந்தை

ஒரு போதகரானவர், வேதப்படிப்பொன்றை நடத்திக் கொண்டிருக்கும் போது, அவர் விசுவாசிகளை நோக்கி: "நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறிய பவுலடிகள் அறிவுரை கூறுகிறார் எந்த சந்தர்ப்பங்களிலே நாம் இதை கடைப்பிடிக்க வேண்டும்? நம் வாழ்விலே இதைக் கடைப்பிடிக்க தேவையில்லை என்று கூறும் சந்தர்ப்பம் ஏதேனும் உண்டா? சபை ஆராதனைகள், சபை வைபவங்கள், உயர்வான நேரங்கள், தாழ்வான காலங்கள், வேதனைகள் மற்றும் சோதனைகள் சூழும் நேரங்கள், குடும்ப சமூக வைபோவங்கள், நண்பர் உறவினரோடுள்ள மத்தியில், கலவி நிலையங்களில், வேலைத் தலங்களில் நன்மைக்கு தீமை செய்யப்படும் காலங்கள், காரணமின்றி பகைக் கப்படுகின்ற நேரங்கள் இப்படியாக எந்த சூழ்நிலையிலே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை விட்டு விட முடியும்? சற்று சிந்தித்துப் பாருங்கள் என்றும் இவைகளை குறித்து ஒவ்வொருவரையும் வேண்டிக் கொண்டார். கிறிஸ்துவின் சிந்தையை தரித்திருப்பதைக் குறித்து இன்று நாம் நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்போம். நம்முடைய கர்தராகிய இயேசு கிறிஸ்து, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். எந்த காலத்திலும், எந்த வேளையிலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்விலே நிறைவேற்றும்படி தம்மை நிபந்தனையின்றி ஒப்புக் கொடுத்தார். நாம் நம் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலைகளிலும், நம்முடைய மாம்ச சிந்தைக்கு இடங்கொடுக்காமல், கிறிஸ்துவைப் போல, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நம் வாழ்விலே நிறைவேற்றுவதில் அனுதினமும் வளர்ந்து பெருக வேண்டும்.

**பிலிப்பியர் 2:5**

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;**

**ஜெபம்**: மேலானவைகளையே நாடுங்கள் என்ற தேவனே, கிறிஸ்துவும் எனக்காய் பாடுபட்டது போல, நானும் அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து, அழியாத மகிமையப் பெற்றுக் கொள்ள பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | வைகாசி 22

📖 மாலை வாசகம் – சங்கீதம் 37:25

# எல்லா பயத்தையும் நீக்குவார்

தாவீது ராஜா, இளைஞனாக இருந்த நாட்களிலே, அவன் தன் தகப்ப னானவனின் கொஞ்ச ஆடுகளை கண்ணும் கருத்துமாக பராமரித்து வந்தான். தன் வாழ்வின் உயர்வான நாட்களிலும், தாழ்வான நாட்களி லும், எதிரிகளால் சூழ்ந்து கொண்ட நேரத்திலும், பாவம் செய்து ஒடு ங்கி போல சந்தர்ப்பங்களிலும், தேவனை துதிப்பதை அவன் விட்டு விடவில்லை. “கர்த்தரை நான் எக்கால த்திலும் ஸ்தோத்திரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.” என்று அவன் பாடின சங்கீதத்தின்படி வாழ்ந்து வந்தான். சொந்த ஜனங்க ளால்துரத்த ப்பட்டு, வனாந்திரத்திலே இருந்த நாட்க ளிலே “என் வாய் ஆனந்தக் களிப்பு ள்ள உதடுகளால் உம்மைப் போ ற்றும். என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சா மங்களில் உம்மைத் தியானிக்கி றேன்” என்று தேவனைத் துதித்துப் பாடினான். அவன் எக்காலத்திலும் தேவனை தேடினான், ஆதலால் தேவன்தாமே அவனுடைய எல்லாப் பயத்துக்கும் அவனை நீங்கலாக்கிவிட்டார். இன்றைய நாட்களிலே மனிதர்கள் பொதுவாக மரணவீடுகளிலே தேவனை குறித்து சிந்திக்கின்றார்கள். அவர்களில் ஒரு சிலர் இழப்புகள் உண்டாகும் போது, விசுவாசத்திற்கு விரோதமான வார்த்தைகளை அறிக்கையிடுகின்றார்கள். திருமண நாட்களிலே, ஆலயத்திற்கு சென்று சுமார் ஒரு மணிநேரம், தேவன் முன்னிலையிலே தேவ பயத்தோடு ஒருவரை ஒருவர் தாங்கி வாழ்வோம் என்று அறிக்கையிடுகின்றார்கள். தங்கள் பிள்ளைகளை தேவபயத்தோடு வளர்ப்போம் என்று உறு திமொழி கூறிக்கொள்கின்றார்கள். பின்னர், கொண்டாட்ட மண்டபத்தி ற்கு சென்று பல மணிநேரங்கள் குடித்து வெறித்து பல களியாட்டங்க ளிலே ஈடுபடுகின்றார்கள். கல்வி கற்கும் இளமை நாட்களிலே பக்திே யாடு ஆண்டவரை தேடுகின்றார்கள். படித்து பட்டம் பெற்ற பின்பு முன் பிருந்த பிரதிஷ்டைகளிலிருந்து விலகி, இளம் காலத்திலே வாழ்கையை உல்லாசமாக களிக்க வேண்டும் என்று அதற்குரிய வழிகளை தேடிக் கொள்கின்றார். ஆனால், நாமோ எக்காலத்திலும் நம் தேவனை ஆர்வ த்தோடு தேடுகின்றவர்களாகவும், பிரதிஷ்டையிலிருந்து விலகிக் கொள் ளாமலும், அவரை எப்போதும் மகிமைப்படுத்துகின்றவர்களாகவும் இரு க்க வேண்டும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.

**சங்கீதம் 34:9**

**கர்த்தருடைய பரிசுத்த வான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக் குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.**

**ஜெபம்:** நீதியின் தேவனே, என்னுடைய வழிகளின்மேல் நீர் பிரியமாக இருக்கும்படி, என் வாழ்க்கையின் உயர்விலும், தாழ்விலும், எல்லா பரு வங்களிலும், என்னுடைய நடைகள் நீர் காத்துக் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீடித்த நாட்கள்

சீரும் சிறப்புமாக நீடூழி வாழ வாழ்த்துகிறோம் என்று மனிதர்கள் தங்கள் வாழ்த்துதலைக் கூறிக் கொள்வார்கள். நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் என்று உலகோர் கூறிக்கொண்டாலும், நோயுற்று போகும்வரை செல்வத்தை திரட்டடிக் கொள்வதற்கு அரும்பாடுகளை படுகின்றார்கள். எவை எப்படியாக இருந்தாலும், நிச்சயமாக மனிதர்கள் எல் லோரும் நீடித்த மகிழ்ச்சியான, அமைதி நிறைந்த, நிறைவுள்ள வாழ்க்கையை இந்த உலகத்திலே வாழ விரு ம்புகின்றார்கள். அப்படியாக ஒரு மனிதனானவன் இந்த உலகத்திலே நிறைவான செல்வத்தோடும், பூரணமான ஆரோக்கியத்தோடும், நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் அதனால் அவனுக்கு உண்டாகும் நன்மை என்ன? மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இந்த உலகத்தின் போக்கை நாடி, அதிலே வெற்றி பெற்றவர்கள் இந்த உலகத்தை ஆதாயப்படுத்திக் கொள்கின்றார்கள். அவர்களின் மரண வீட்டிலும், அவன் நிறைவாக வாழ்ந்தான் என்ற வாழ்த்துதலை பெற்றுக் கொள்கின்றார்கள். ஆனால், இந்த உலகத்தின் போக்கிலே, ஒருவராலும் நித்திய நன்மை யான பரலோகத்தை கண்டடைய முடியாது. நித்திய ஜீவனை நாடி ஓடு கின்றவர்கள், நித்திய நன்மையை வாஞ்சிக்கின்றார்கள். அந்த நன்மையானது என்ன? பரலோகத்திலே பிதாவின் சித்தம் செய்யப்படுவதைப் போல, இந்தப் பூலோகத்திலே தங்கள் வாழ்க்கையை பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்களே நித்திய நன்மையை கண்டடைகின்றார்கள். உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் நாடும் நன்மை என்ன? ஒலிம்பிக் ஓட்டப் போட்டியிலே பங்கு பெற்றும் ஓட்டப் பந்தைய வீரனானவனின் கண்கள், பரிசாகிய தங்கப் பதக்கத்தின்மேல் இருக்கும். இதை பெற்றுக் கொள்ளும்படி அவன் பல ஆண்டுகள் அயராது பிரயாசப் படுகின்றான். பல தியாகங்களைச் செய்து, பயிற்சிகளை எடுக்கின்றான். உங்கள் கண்கள் எங்கே பதிந்திருக்கின்றது. உங்கள் வாழ்வின் இலட்சியம் என்ன? எதை நன்மையை என்று கருதுகின்றீர்கள்? எதை நீடித்த வாழ்வு என்று எண்ணுகின்றீர்கள். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அதையே உங்கள்வாழ்வின் மேன்மை என்று எண்ணுங்கள்.

**சங்கீதம் 34:12**

**நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் உம்முடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பதன் மேன்மையை உணர்ந்து கொள்ளும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து நடத்துவீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தரை தேடுகின்றவர்கள் யார்?

மாலை வேளை தன் நண்பர்களோடு இரவு நேர கேளிக்கை விடுதிக்கு (Night Club) செல்வதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த வாலிபனா னவன், அன்றைய நாள் தேவனுடைய பண்டிகையின் நாளாக இருந்த தால், காலையிலே ஆலயத்திற்கு சென்று செய்ய வேண்டி சடங்கு களை முறைப்படி முடித்துவிட்டு, மதிய வேளையிலே வீடு திரும்பி னான். அன்றிரவு அவன் எங்கே போகி ன்றான் என்று அறிந்திருந்த பெற்றோர்? அவனை நோக்கி: நீ ஆலயத்திற்கு சென்று வந்தாயா என்று கேட்டார்கள். அதற்கு அவன் ஆம் நான் சென்று இன் னென்ன பிரகாரமாக சடங்குகளை செய்தேன் என்று விளக்கிக் கூறினான். மாலையிலே அவன் செல்லவிருக்கும் இடத்தில் நடைபெறும் நிகழ் சிகள், களியாட்டங்கள், பார்க்கக்கூடாத காட்சிகள், அருந்தக்கூடாத பான ங்கள், நுகரக்கூடாத பொருட்கள் போன்றவற்றைப்பற்றி அவர்கள் எதை யும் அவனிடம் கேட்கவில்லை. அவன் மதச் சடங்குகளை நிறை வேற்றினான் என்ற மனத்திருப்தி பெற்றோருக்கு போதுமாக இருந்தது. இது தேவனை திருப்த்தி படுத்துமாக? வெறும் மதங்சடங்கசுகள் தேவ னுக்கு உகந்த வாசனையாக இருக்குமா? அந்த வாலிபனானவனும், அவனு டைய பெற்றோரும் தேவனைத் தேடுகின்றார்கள் என்று கூற முடியுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு நன்மையுங் குறைவுபடாத வாழ்க்கை கர்த்தரைத் தேடுபவர்களுக்குரியதாகும். கர்த்தரை தேடுகின் றவர்கள் யார்? கர்த்தரை தேடுகின்றவர்கள், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறார்கள். பிள்ளைகளே, வந்து எனக்குச் செவி கொடுங்கள் கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன். உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்பு க்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி, நன்மைசெய் சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள் என்று பரிசுத்த வேதா கமத்திலே வாசிக்கின்றோம். இன்று பல மனிதர்கள், தங்கள் வாழ்விலே கர்த்தரை ஆலயக்கட்டிடங்களுக்கு உட்படுத்தி, ஆலய வாசலோடு கர்த் தரை விட்டுவிடுகின்றார்கள். அதன்பின்னர் தங்கள் இருதயம் வாஞ்சிப் பதை நாடித் தேடுகின்றார்கள். பிரியமானவர்களே, நாமே தேவன் தங்கும் ஆலயமாக இருக்கின்றோம். நம்முடைய வாழ்க்கையானது, தேவனுக்கேற்ற பரிசுத்தமுடையதாக இருக்க வேண்டும். எனவே வேதம் தீமை என்று கூறுபவைகளை விட்டு விலகுங்கள். சத்திய வேதம் கூறும் நன்மைகளை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 34:10**

**கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் உம் வேதத்தின் வழியில் நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காலத்தை பிரயோஜனப்படுத்துங்கள்

**எபேசியர் 5:16**

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஒரு தகப்பனானவர், வார இறுதி நாட்களிலே, வேலைக்கு சென்றால் நல்ல இடங்களிலே இரட்டிப்பான ஊதியத்தோடு வேலை செய்யலாம் என்று அறிந்திருந்தும், கர்த்தருடைய நாளை பிரதிஷ்டையோடு அனுசரிக்க வேண்டும் என்ற வாஞ்சையினால் சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில்வரும் நல்ல வேலைகளை தவிர்த்துக் கொண்டார். ஏனெனில், கிறிஸ்துவாகிய கன்மலையில் தன் குடும்பம் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற நோக்கம் அவர் மனதிலே பற்றியெரிந்தது. இப்படியாக காலங்கள் கடந்து சென்று அவருடைய பிள்ளைகள்வளர்ந்து, படித்து பட்டம் பெற்ற பின்பு, நல்ல உத்தியோகங்களிலே அமர்ந்தார்கள். இப்போது, அவர்கள் உல்லாசப் பயணம் செல்ல வேண்டும் என்று, கர்த்தரை அறியாத நண் பர்களோடு சேர்ந்து, நாடுவிட்டு நாடு சென்று, சில வார இறுதி நாட்களை, கடற்கரைகளிலும், உல்லாச வளாகங்களிலும் (Tourists Compound) களித்து வந்தார்கள். இந்த சம்பவங்களை சற்றுத் தியானித்துப் பாருங்கள். 1. பெற்றோர் விபரமறியாமல், மதியீனமாக தங்கள் உழைப்பை கருத்திற் கொள்ளாமல், கர்த்தருடைய நாளை அனுசரித்து வந்தார்களா? அல்லது 2. பிள்ளைகள் கர்த்தரை அறியாமல் வாழும் வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் வழிகளை தெரிந்து கொண்டிருக்கின்றார்களா? இந்த உலகமானது இருளிலே இருக்கின்றது. உலகத்திற்கு வந்த மெய்யான ஒளியாகிய இயேசு கிறிஸ்து வழியாக நாம் அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு அழைக்கப்பட்டோம். ஏதேனிலே ஏவாளை வஞ்சித்த வஞ்சகத்தின் ஆவி இப்போதும் கிரியை செய்து வருகின்றது. அந்த ஆவியானது காரிருளிலிருப்பவர்களை வஞ்சிக்கத் தேவையில்லை. ஆனால், தேவ பிள்ளைகளை வஞ்சிக்கும்படி அவர்கள் மத்தியிலே கிரியைகளை நடப்பித்து வருகின்றது. உலகம் தரும் இன்பத்தை அறியாமல் வாழ்ந்த நாட்கள் அநாகரீகம் என்று சில விசுவாசிகளும்கூட இழு ப்புண்டு போகும் காலமாக இருக்கின்றது. கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். பெருந்திண்டிக்காரரும், இந்த உலக கவலைகளால் உள்ளம் நிறைந்திருக்கும் மனிதர்கள் தங்குமிடங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். கற்றுக் கொண்ட சத்தியத்திலிருந்து விலகிக் கொள்ளாமல், சத்தியத்திலே உறுதியாய் நிலைத்திருங்கள். கர்த்தர் சமீபமாகயிருக்கின்றார்.

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தின் மாயைக்குள் நாம் சிக்கிவிடாமல், ஆதியிலே கொண்ட, உம்மைக் குறித்த வைராக்கியத்தில் உறுதியாய் நிலைத்திருக்க பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசியாயிரு

“அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு” என்று மரணத்தை வென்று உயிர்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே, தம்முடைய சீஷனாகிய தோமாவிற்கு கூறினார். சுமார் மூன்றரை வருடங்கள் கர்த்தரோடுகூட இருந்தும், அவர் சீஷர்களுக்கு சொன்னதையும், தீர்க்கதரிசிகளால் மெசியாவைக் குறித்து கூறின வார்த்தைகளையும் அவனும், அவனோடிருந்தவர்களுக்கும் விசுவாசிப்பது கடினமாக இருந்தது. காண்பதை விசுவாசிப்பது விசுவாசம் அல்ல. நாம் காணாத பரலோகத்தை விசுவாசிக்கின்றோம். ஒருநாள் நாம் பரலோகிலே கர்த்தரோடு வாழும் போது, நாம் பரலோகத்தை காண்பதினால் பரலோகமொன்று இருக்கின்றது என்று விசுவாசிக்கத் தேவையில்லை. மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இந்த வார்த்தையானது அவரை விசுவாசியாத உலகத்தாரை குறித்ததல்ல. அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட நம்மை குறித்தது. நம்முடைய விசுவாசம் ஒழிந்து போவது தேவனுடைய சித்தமல்லவே. மனதிலே குழப்பமும் நிலையற்றவர்களாகிய விசுவாசிகள் தங்கள் வழிகளையும், தெரிவுகளையும் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இவைகளை நமக்கு முன்னறிவித்திருக்கின்றார். ஏன் விசுவாசிகள் விசுவாசத்தை விட்டு விலகிப்போகி ன்றார்கள்? எப்படியாக அவர்கள் வழுவிப்போகின்றார்கள்? அவர்கள் திட்டமிட்டு செய்கின்றார்களா? பொதுவாக எவரும் திட்டமிட்டு, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவதில்லை. எப்பொழுது விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையைக் குறித்து, தேவ வார்த்தையின் ஒரு சிறு எழுத்தை, ஒரு எழுத்தின் உறுப்பை கூட அற்பமாக எண்ணுகின்றார்களோ, அந்த வேளையிலே விசுவாசத்தைவிட்டு வழுவிப்போகின்ற இருதயத்தை தங்களிலே உருவாக்கிவிடுகின்றார்கள். விசுவாசத்தைவிட்டு வழுவிப்போகும் போது, நாம் முன்பு இருந்தது போலவே இருக்கின்றோம். அதைவிட வசதியாக இருக்கின்றோம் என்று விசுவாசிகள் எண்ணிக் கொள்கின்றார்கள். அவர்கள் தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார் என்பதை மறந்து, தேவ கிருபையை அசட்டை செய்ய ஆரம்பிக்கின்றார்கள். காலப்போக்கிலே, அவர்கள் தங்கள் இருதயத்தில் விதைத்த விதையானது முளைத்து, கசப்பான கனிகளை கொடுக்கும் போது, நாங்கள் என்ன தவறு செய்தோம் என்று தங்களைக் குறித்து ஆச்சரியப்படுகின்றார்கள். தேவன் உரைத்தவை களை உறுதியாக இறுகப் பற்றிக் கொண்டு அவர் வழியிலே நடவுங்கள்.

**யோவான் 20:29**

**காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.**

**ஜெபம்:** நீடிய பொறுமையுள்ள தேவனே, நான் உம் வார்த்தைகளின் வழியை விட்டு சற்றும் விலகிப் போகாதபடிக்கு எனக்கு நீர் உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாச அறிக்கை

திருமண விழாவன்று, மணவாளனானவன், பலர் முன்னிலையில் தன் உரையை ஆரம்பித்தான். விழாவின் நாயகனாகிய அவனுடைய உரையை கேட்பதற்கு யாவரும் தங்கள் கவனைத்தை அவன் பக்கமாகத் திருப்பிக் கொண்டார்கள். தன் மனைவியை எப்படியான அன்பு செய்து, அவளை கண்கலங்காமல் காத்துக் கொள்வேன் என்று அழகிய கவிதை நடையிலே அவன் சொற்பழிவாற்றினான். பலர் முன்னிலையில் நல்ல அறிக்கை செய்தான். விருந்தினரும்கரகோஷங்களை எழுப்பினார்கள். விழா முடிவடைந்து, இளம் தம்பதியின ரின் ஆரம்ப நாட்கள் மிகவும் நன் றாக இருந்தது. ஆனால், நாட்கள் கடந்து சென்றாலும் போது, அந்த புருஷனானவன் ஆற்றிய உரைக்கும் அவன் தன் மனைவியை நடத்திக் கொள்ளும் முறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதிருந்தது. ஆனாலும் அவளை அவன் தன் மனைவி என்றே சொல்லிக் கொள்வான். இப்படிப்பட்ட அறிக்கையை குறித்து நீங்கள் என்ன சொல்வீர்கள்? நல்ல அறிக்கைகள் சொல்வது மட்டுமல்ல, அவைகளை வாழ்விலே செயல்படுத்த வேண்டும். மிக முக்கியமாக, அந்த அறிக்கையாளரின் உண்மைத் தன்மையானது, வாழ்க்கையிலே சாவல்களும் நெருக்கங்களும் உண்டாகும்போது வெளிப்படும். என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். (ரோமர் 10:9-10) என்று வேதம் கூறுகின்றது. கருப்பொருளாவது, விசுவாச அறிக்கையானது வாழ்விலே செயல்படுத்தப்படல் வேண்டும்.இன்று பல மனிதர்கள் தேவனை இருக்கின்றார் என்றும், இயேசு இரட்சகர் என்றும் அறிக்கையிடுகின்றார்கள். தேவன் ஒருவர் உண்டென்று பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின் றன. நாம் ஆண்டவர் இயேசுவை இரட்சகர் என்று விசுவாசித்தால், வாயினாலே அறிக்கை பண்ண வேண்டும். அந்த விசுவாச அறிக்கையானது நம் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் நம் கிரியைகளினாலே உறுதிப் பண்ணப்பட வேண்டும். உயர்விலும், தாழ்விலும், வேதனையிலும், சோதனையிலும், அந்த விசுவாச அறிக்கையின்படி நற்சாட்சியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். தேவன் முன்னினையிலே உண்மையு ள்ளவர் களாக இருக்க வேண்டும். அவரை உண்மையாய் விசுவாசித்து, அவருடைய வார்த்தையின் வழியிலே வாழ்கின்றவனெவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.

**ரோமர் 10:10**

இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானங்களும், என் வாழ்விவே நான் செய்யும் கிரியைகளும் உம்முடைய வார்த்தையின்படி ஒத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கு பிரியமானவர்கள்

ஒரு வீட்டின் சொந்தக்காரன், தன் குடும்பத்தோடு தூர தேசமொன்றிற்கு செல்ல வேண்டிய அவசியமேற்பட்டதால், தன் வீட்டில் வேலை செய்து வந்த வேலைக் காரனை அழைத்து, வீட்டின் திறப்புக்கள் யாவற்றையும் அவன் கையில் கொடுத்து, நாங்கள் திரும்பி வர பல நாட்களாகும். நீ இந்த வீட்டை கவனமாகப் பராமரித்து காத்துக் கொள், நாங்கள் திரும்பி வரும் போது, உனக்கு அதற்குரிய சன் மானத்தை தருவேன் என்று கூறிச் சென்றான். எத்தனையோ கோடிக்கண க்கான பெறுமதியுள்ள பொருட்கள் அந்த வீட்டிற்குள் இருந்தும், அவன் அவைகள் மேல் தன் புலன்களை செலுத்தாமல், தன் எஜமனானானவன் சொன்ன வார்த்தையை விசுவாசித்து, அந்த வார்த்தையின்படி உண்மை யுள்ளவனாக இருந்தான். தன் நண்பர்களோடு சேர்ந்து வீட்டை விட்டுச் செல்லாமலும், அவர்களை வீட்டிற்கு அழைத்து வீட்டை மாசுபடுத்தா மலும், மதுபானம் அருந்தி வெறி கொண்டு தூங்காமலும், மிகவும் ஜாக் கிரதையுள்வனாக விழித்திருந்தான். எஜமானானவன் திரும்பி வந்த போது, தன் வேலைக்காரனின் உண்மைத் தன்மையைக் கண்டு ஆச்சரி யப்பட்டான். தன் வார்த்தையின்படி அவனுக்கு மிகுந்த சன் மானத்தை கொடுத்தான். பிரியமானவர்களே, தேவனை விசுவாசிக்கின்ற நீங்கள் உங்கள் வாழ்க்கையிலே விசுவாசத்தின் கிரியைகளை நடப்பி க்கின்றீர்களா? நோவா என்ற மனிதனுடைய நாட்களிலே, மழையைக் குறித்தோ, வெள்ளப் பெருக்கைக் குறித்தோ எந்த அறிவுமில்லாதிருந்த போது, தேவனாகிய கர்த்தர் ஒரு பேழையை உண்டு பண்ணு என்று நோவாவிடம் கூறினார். விசுவாசத்தினாலே நோவா வாழ்ந்த காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ள வனாகி, அந்த நாளை நோக்கி வாழ்ந்து வந்தான். தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். நம்முடைய கர்த்த ராகிய இயேசு நான் மறுபடியும் வந்து உங்களை அழைத்து கொண்டு செல்வேன். எனவே இந்த உலகத்தின் போக்கில் செல்லாதபடிக்கு, உணர்வுள்ளவர்களாக அவருடைய வருக்கைக்காக காத்திருக்கும்படி கூறியிருக்கின்றார். எதிர்ப்புக்கள், ஏளனங்கள், நஷ்டங்கள், அவமான ங்கள் மத்தியிலும், நாம் உலக பொருட்களின்மேல் கண்களை பதிய வைக்காமல், நம்முடைய பேழையாகிய கிறிஸ்துவுக்குள்ளானவர்களாக நாம் வாழ வேண்டும். விசுவாசித்தால், நோவாவைப் போல விசுவாச த்தின் கிரியையை பெறுமையோடே நடப்பியுங்கள்.

**எபிரெயர் 11:6**

விசுவாசமில்லாமல் தேவ னுக்குப் பிரியமாயிருப் பது கூடாதகாரியம்

**ஜெபம்**: பரலோக தேவனே, வேதத்திலே காணும் உமக்கு பிரியமான பாத்திரங்களைப் போல, விசுவாசத்தின் கிரியைகளை நான் என் வாழ் விலே நடப்பிக்கும்படி நீர் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வழுவிப்போகாத இருதயம்

**கொலோ 3:2**

பூமியிலுள்ளவைகளைய ல்ல, மேலானவைகளை யே நாடுங்கள்.

பல மனிதர்கள் இந்த உலகிலே வெகுவாய் பிரயாசப்படுகின்றார்கள். இளமைக் காலங்களிலே, தேவனை தேடுவதைவிட கல்வி கற்பதே அல்லது தேவனை தேடுவதைவிட வேலை செய்வதே முதன்மையானது என்று அதற்கேற்ப கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். ஒருவன் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவதைவிட்டு, அதை இரண்டாம் இடத்திற்கு தள்ளி விடும் போது, அவன் வாழ்வில் அவன் மேன்மைப்படுத்தும் காரியமானது அவன் இருதயத்திலே முதலாவது இடத்தை பெற்று விடுகின்றது. எது ஒரு மனிதனுடைய இரு தயத்தில் முதன்மையான இடத்தை பெற்றுக் கொள்கின்றதோ, அதுவே அவனுடைய பொக்கிஷமாக மாறிவிடுகின்றது. பரம பிதா நம்மை பிழைப்பூட்டுகின்றார் என்பதன் கருப்பொருளை மறந்து போய்விடுகின்றார்கள். தேவனுக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும் மகிமையையும், இந்த உலகத்தின் கல்விக்கும், வேலைக்கும், வேலைதலத்தின் எஜமான்களுக்கும் கொடுத்துவிடுகின்றார்கள். ஏன் மனிதர்கள் அப்படியாக பிரயாசப்படுகின்றார்கள்? அவர்களின் அடிப்படை தேவை என்ன? பணம் மற்றும் பொருள் போன்ற வைகளே தங்களையும் தங்கள் சந்ததியையும் பிழைப்பூட்டும் என்று தேவனுடைய இடத்தை அவைகளுக்கு கொடுப்பதால், பொருளாசையாகிய விக்கிரக ஆராதனைக்கு தங்களை ஒப்புக் கொடுத்து விடுகின்றார்கள். ஒருவேளை இந்த உலகத்திலுள்ள மனிதர்கள் தங்கள் அறியாமையினாலே இவைகளை நடப்பிக்கலாம். ஆனால், தேவனை அறிந்த தேவபிள்ளைகள், விசுவாச மார்க்கத்தார் இவைகள் நன்கு அறிந்தும், இவைகளுக்கு தங்களை ஒப்புக் கொடுக்கும்போது, தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தை பணத்தின் மேலும், பொருளின் மேலும், தங்கள் பிரயாசத்தின்மேலும் வைத்து விடுகின்றார்கள். இவர்கள் தேவபிள்ளைகள் தான் ஆனால் விசுவாசத்தை விட்டு வழுவிப்போ இடங்கொடுத்த “கீழ்படியாமையின் பிள்ளைகள்” என்ற பெயரை தங்களுக்கு தாங்களே தரித்துக் கொள்கின்றார்கள். தங்களை பரிதாப நிலைமையை உணர்ந்து மனந்திரும்பாதவர்கள், தேவகோபாக்கினையை தங்கள்மேல் வரவழைத்துக் கொள்கின்றார்கள். எனவே, பிரிமானவர்களே, இந்த பூமிக்குரியவைகள் நிலையற்றவைகள், அவைகளை பற்றிக் கொள்கின்றவர்களும் அப்படியே இருக்கின்றார்கள். நீங்களோ, நிலையான பரலோகத்திற்குரியவைகளை நாடித்தேடுங்கள்.

**ஜெபம்**: அன்பின் பிதாவே, நான் பொருளாசை பற்றிக் கொண்டு விசுவாசத்தைவிட்டு வழுவிப்போகாதாபடிக்குஉலக ஆசைகளை உண்டுபண்ணும் அவயவங்களை அழித்துப்போட கிருபை செய்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.